IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.598/2019

Deposition of Witness PW4

| | | | |
|---|---|---|---|
| Name | : சரஸ்வதி | Father Name : | |
| Village | : | Calling | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.10.2025

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

முதல் விசாரணை

நான் ஈரோடு கரியாகவுண்டன்வலசுவில் குடியிருந்து பருத்தி விதை வியாபாரம் செய்து வருகிறேன். கிரிபிரசாத் டிரேடர்ஸ் என்ற பெயரில் 2007 ஆம் ஆண்டில் இருந்து பருத்தி விதை புண்ணாக்கு வியாபாரம் செய்து வருகிறேன். எனது நிறுவனத்தில் இருந்து பல்வேறு நபர்களுக்கு ரொக்கம்மாகவும், கடனுக்கும் வியாபாரம் செய்து வருகிறோம். கோவை உக்கடம் ராஜு வீதியைச் சேர்ந்த KR ட்ரேடர்ஸ் நிறுவனத்தைச் சார்ந்த கிருஷ்ணன் என்பவர் எங்களிடம் புண்ணாக்கை அனுப்பி வைக்குமாறும் அதற்கு உண்டான பணத்தை தந்துவிடுவதாகவும் நம்பிக்கையாக பேசினார். அந்த நம்பிக்கையின் பேரில் 68 மூட்டை புண்ணாக்கை, 2012 ஆம் ஆண்டு இரண்டாவது மாதம், 407 வாகனத்தில் அனுப்பி வைத்தோம். அதே வருடம் மூன்றாவது மாதத்தில் 110 மூட்டை புண்ணாக்கை அனுப்பி வைத்தோம். அதே மாதத்தில் மீண்டும் 120 மூட்டை புண்ணாக்கை அனுப்பி வைத்தோம். மூன்று முறையும் அனுப்பிய மொத்த புண்ணாக்கின் மதிப்பு ரூபாய் 2 லட்சத்திற்கு மேல் இருக்கும். அதில் கிருஷ்ணன் என்பவர் ரூபாய் 50,000/-த்தை அவரது வங்கி கணக்கிலிருந்து எங்களது நிறுவனத்தின் வங்கி கணக்கிற்கு அனுப்பி வைத்தார். அதன் பிறகு கிருஷ்ணன் என்பவர் கிழங்கு மாவை அனுப்பி வைக்குமாறு கேட்டார். அதே

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2025.10.07 18:28:58 +0530

வருடம் மூன்றாவது மாதத்தில் ஈரோடு பார்க் முத்துசாமி கம்பெனியில் உரிமையாளர் சண்முகம் என்பவரிடமிருந்து 150 மூட்டை கிழங்கு மாவை வாங்கி நாங்கள் கிருஷ்ணன் என்பவருக்கு லாரியில் அனுப்பி வைத்தோம். பிறகு நான்காவது மாதம் 138 மூட்டை கிழங்கு மாவை கிருஷ்ணன் என்பவருக்கு அனுப்பி வைத்தோம். நாங்கள் அனுப்பிய கிழங்கு மாவின் மொத்த மதிப்பு ரூபாய் ஒன்றரை லட்சத்திற்கு மேல் இருக்கும். நாங்கள் அனுப்பிய சரக்கிற்கு பணம் அனுப்புமாறு கேட்டபோது கிருஷ்ணன் என்பவர் ஒரு காசோலை கொடுத்தார். அந்த காசோலையை வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்த போது பணம் இல்லை என திருப்பப்பட்டது.

பிறகு எனது கணவர் கிருஷ்ணன் என்பவரின் கம்பெனிக்கு நேரடியாக சென்று கேட்டார். அப்போது கிருஷ்ணன் என்பவர் அங்கு இல்லை அந்த நிறுவனமே அங்கு இல்லை. அங்கு இருந்தவர்கள் பல பேரிடம் கிருஷ்ணன் இது போல் மோசடி செய்துள்ளதாக எனது கணவரிடம் சொன்னார்கள். அதன்பிறகு நாங்கள் ஈரோடு வந்து மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்தோம். எதிரி கிருஷ்ணன் என்பவரை எனக்கு தெரியும் அவர் தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை அவரைப் பார்த்தால் என்னால் அடையாளம் காட்டை இயலும். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் நடத்தி வரும் கிரிபிரசாத் டிரேடர்ஸ் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஆகும். அதற்கான பதிவு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த சான்றிதழை நான் கொண்டு வந்துள்ளேன். கிரி பிரசாத் டிரேடர்ஸ் நிறுவனத்தை எனது கணவர் தான் நிர்வகித்து வந்தார் என்றால் நான் தான் பொறுப்பில் இருந்தேன். எனது கணவர் வெளியில் சென்று



S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2025.10.07 18:29:06 +0530

வருவது மற்ற கணக்கு வழக்குகளை பார்ப்பது என நாங்கள் தான் செய்து வந்தோம். எனது கணவர் நிர்வாகம் செய்து வருவதற்கு பொது அதிகாரம் கொடுத்துள்ளேன் அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் பொது அதிகார ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும் தாக்கல் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் தான் நிறுவனத்தை நிர்வகித்து வருவதால் எனது கணவருக்கும் எதிரிக்கும் இடையே நடந்த வரவு செலவுகள் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான் எனது கணவர் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். நாங்கள் அனுப்பிய பில்லில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை என்றால் சரிதான் எனது கணவர் தான் போட்டுள்ளார்.

இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பில்கள் இந்த வழக்கிற்காக தயாரிக்கப்பட்ட பில்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கு சரக்குகள் அனுப்பியதாக சொல்லப்படும் வாகனம் எங்களது சொந்த வாகனம் இல்லை என்றால் சரிதான் ரெகுலராக அனுப்பப்படும் வாகனம். பொதுவாக வேறு வாகனத்தில் சரக்குகள் அனுப்பப்பட்டால் டெலிவரி ரசீது போடுவார்கள் என்றும், அந்த டெலிவரி ரசிதை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். டெலிவரி ரசீது உட்பட பில்கள் அனைத்தும் லாரி டிரைவருக்கு கொடுக்கப்பட்டு அவர் கிருஷ்ணன் என்பவரிடம் கொடுத்துள்ளார். உண்மையாகவே எதிரிக்கு சரக்குகள் எதுவும் அனுப்பவில்லை என்றும், அவ்வாறு அனுப்பி இருந்தால் அதற்கான பில்கள் தாக்கல் செய்திருப்போம் என்றால் சரியல்ல. வழக்கு காசோலை எதிரி எப்போது யாருக்கு கொடுத்தார் என்றால் 26.04.2012 அன்று எனது கணவரிடம் எதிரி காசோலையை கொடுத்தார். அந்த காசோலையை எதிரி தபாலில் அனுப்பினாரா என்றால் இல்லை எதிரியே நேரடியாக கொடுத்தார். எதிரி ஈரோடு வந்து கொடுத்தாரா என்றால் இல்லை கோயம்புத்தூரில் வைத்து கொடுத்தார். காசோலை திருப்பப்பட்ட பிறகு எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான். அவர் எங்கே உள்ளார் என்று



S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2025.10.07 18:29:11 +0530

தெரியவில்லை அதனால் தான் வழக்கு தாக்கல் செய்தோம். காசோலை திருப்பப்பட்ட பிறகு மாற்றுமுறை ஆவண சட்டத்தின் கீழ் தான் எதிரி மீது நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் என்றும், எதிரியை பழிவாங்க வேண்டும் என்பதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

எனக்கும் எனது கணவருக்கும் தொழிலில் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்வதற்காக எதிரி எங்களது நிறுவனத்திடம் வரவு செலவு செய்யும் போது, பாதுகாப்பிற்காக கொடுக்கப்பட்ட வெற்று காசோலையை வைத்து நாங்களாகவே பூர்த்தி செய்து எதிரி மீது பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எங்களுக்கும், எதிரி நிறுவனத்திற்கும் தொழில் சார்ந்த வரவு செலவு தான் என்றால் சரிதான். நாங்கள் அனுப்பிய சரக்குகள் குறைபாடு இல்லாமல் சரியாக இருக்கும் என்று சொல்ல இயலாது என்றால் சரியல்ல சரியாகத்தான் இருக்கும். நாங்கள் எதிரி மீது தாக்கல் செய்த வழக்கு பொய் வழக்கு என்றும், எங்களது வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நான் எனது கணவருக்கு ஆதரவாக நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2025.10.07 18:29:16 +0530